தீர்வு: 1000 பேருந்து = 1 பஸ் படம் என எடுத்துக் கொள்வோம்.

அரசு பேருந்துகளின் எண்ணிக்கை




பட விளக்கப்படம்

## III. விளக்கப்படம் வரைதலின் சிறப்புக்கள்

## (Merits of Diagrammatic Representation)

1. விளக்கப்படங்கள் எளிதில் பார்ப்பவரின் கவனத்தை ஈர்க்கவல்லது. புள்ளிவிவரங்கள் எதனைக் கூற வேண்டுமென நினைக்கின்றோமோ அதனை விளக்கப்படங்களின் மூலம் எளிதில் உணர்த்தி விடலாம்.

2. மிகவும் சிக்கலான விவரங்களைக் கூட சாதாரண மக்களும் புரிந்து கொள்ளும் வண்ணம் விளக்கப்படங்கள் மூலம் குறிப்பிடலாம். பத்தாயிரம் வார்த்தைகள் கூறுவதை ஒரு படம் கூறுகின்றது.

3. படிப்பவர்களின் நேரத்தையும் சக்தியையும் விளக்கப்படம் மிச்சப்படுத்துகின்றது.

4. விவரங்களை ஒப்பிட்டுப் பார்ப்பதற்கு விளக்கப்படங்கள் வசதியாக இருக்கின்றன. பல்வேறு புள்ளி விவரங்களுக்கிடையேயுள்ள தொடர்பினையும், ஒரு புள்ளிவிவரத்திற்கும் அதன் உட்பிரிவுகளுக்குமிடையேயுள்ள தொடர்பினையும் விளக்கப்படங்கள் மூலம் எளிதில் உணர்த்தலாம்.

5. எண்களை விடப் படங்கள் மனதில் எளிதில் பதியும்

ஆகையால், பார்ப்பவர்கள் விவரங்களை மறக்காமல் நீண்ட நாட்கள் மனதில் வைக்க முடியும்.

6. கூட்டுச் சராசரி, இடைநிலை மற்றும் முகடு ஆகிய புள்ளியியல் அளவைகளை வரைபடங்கள் (Graphs) மூலம் கண்டுபிடிக்கலாம்.

7. இரண்டு மாறிகளுக்கிடையேயுள்ள உடன் தொடர்பு மற்றும் ஒட்டுறவினை வரைபடங்கள் மூலம் அறியலாம்.

8. வரைபடங்கள் மூலம் புள்ளிவிவர பரவலின் இயல்புகளையும், தன்மைகளையும் பார்த்த மாத்திரத்தில் அறியலாம்.

## IV. விளக்கப்படங்கள் வரைதலின் குறைபாடுகள்

1. எண்களுக்குச் சரியான பதிலி (Substitute) யாக விளக்கப்படங்களைக் கொள்ள முடியாது.

2. பட்டியலில் சரியான மதிப்புகளைக் குறிப்பிட முடியும். ஆனால் விளக்கப்படங்களில் பெரும்பாலும் தோராயமதிப்புகளையே குறிப்பிட முடியும்.

3. விளக்கப்படங்களின் மூலம் ஒரு கருத்தை சரியென்றோ அல்லது தவறென்றோ நிரூபிக்க முடியாது.

4. விளக்கப்படங்களை அடிப்படையாக வைத்துக் கொண்டு மென்மேலும் ஆய்வை விரிவாகச் செய்ய முடியாது. புள்ளி விவரங்களை மூலமாக வைத்துத்தான் ஆராய்ச்சியை விரிவுபடுத்த முடியும்.

5. சிலர் விளக்கப்படத்தை தவறான நோக்கத்தில் பயன்படுத்தலாம். தவறான படங்கள் தவறாகக் கருத்தை வலியுறுத்தும். சில வேளைகளில் வணிகர்கள் மற்றும் விளம்பர தாரர்கள் அதிகலாபம் கருதி தவறான விளக்கப்படங்களின் மூலம் மக்களை திசைதிருப்பி இலாபம் அடையலாம்.

6. விளக்கப்படங்கள் வரைவதற்கு திறமையும், நேரமும் தேவைப்படுகின்றது.